பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை 17.07.2022 கதிர் 143

## மு. கா. யாருக்கு ஆதரவு? கட்சி இன்று கூடி முடிவு



புதியஜனாதிபதியைத்தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து இன்று அறிவிக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் 20 ஆம் திகதி வாக்குப் ☞2

## தப்பியோடிய கோட்டா மீண்டும் இலங்கைக்கு?

### சிறப்புரிமை வசதிகள் ஏற்பாடு



மக்கள் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டத்தால் நாட்டைவிட்டுத் தப்பியோடி பதவி விலகிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த மாதம் மீண்டும் இலங்கை வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

## கோட்டாவை ஓட ஓட விரட்டியடித்த 'கோல்பேஸ்' போராட்டத்துக்கு இன்றுடன் 100 நாள்கள் நிறைவு

கொழும்பு - காலிமுகத்திடலில் ஆரம்பமான போராட்டம் இன்றுடன் 100 நாள்களை நிறைவுசெய்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி இளைஞர் குழுவால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஆதரவாக நாடெங்கும் மக்கள் போராட்டம் வெடித்தது.

இந்த அறவழிப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை ☞2



## 140 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று

# வெற்றிவாகை சூடுவார் ரணில்

### அடித்துக் கூறுகின்றார் வஜிர



**எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 140 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடுவார்.**

**- இவ்வாறு முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.** ☞2

## இடைக்கால ஜனாதிபதிக்கு ரணிலே பொருத்தமானவர்

### டக்ளஸ் பகிரங்கமாகத் தெரிவிப்பு



இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்குத் தற்போதைய பதில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவராக இருப்பார் என நான் நம்புகின்றேன்.

- இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இன்று காலை தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## நடுக்கடலில் தத்தளித்த மன்னார் மீனவர்களில் 2 பேர் மீட்பு; ஒருவர் பலி

(ந.லோகதயாளன்)

மன்னார், பியர் பகுதியில் இருந்து ஒரு படகில் கடற்றொழிலுக்குச் சென்ற மூவரில் இருவர் தமிழக மீனவர்களால் உயிரோடு மீட்கப்பட்டபோதும் மற்றைய மீனவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னாரிலிருந்து கடந்த 14ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற ஒரு படகு கரை திரும்பவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. கடற்படையினருக்கும் அந்தத் தகவல் வழங்கப்பட்டது.

இருந்தபோதும் மூவருடன் பயணித்த இந்தப் படகு நடுக் கடலில் 14ஆம் திகதி இரவே பழுதடைந்த காரணத்தால் மூவரும் தம்மைத் தாமே பாதுகாப்பதற்காகவும், தம்மைக் ☞2

## ரணில் வென்றால் ருவானுக்கு எம்.பி. பதவி



எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், வெற்றிடமாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ☞2

## இலங்கையில் சிறுவர்களைத் தாக்கும் மூன்று நோய்கள் குறித்து எச்சரிக்கை!

இலங்கையில் தற்போதைய நாள்களில், டெங்கு, இன்புளுவென்ஸா மற்றும் கொரோனா முதலான நோய்கள் சிறார்களிடையே பரவும் அபாயம் உள்ளது எனச் சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய் நிலைமைகளுக்கு உள்ளாகும் சிறார்களின் எண்ணிக்கை கடந்த காலத்தில் அதிகரித்துள்ளது எனச் சிறுவர் ☞2



## பூஜையில் வைத்து எடுத்த 10 இலட்சம் ரூபா வழிப்பறி

### யாழ். கோட்டை முனியப்பர் ஆலயம் முன்பாகச் சம்பவம்

தொழிலில் முதலீடு செய்வதற்காக ஆலயத்தில் பூஜையில் வைத்து எடுத்த 10 இலட்சம் ரூபா பணத்தை இருவர் வழிப்பறிக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கோட்டை முனியப்பர் ஆலயம் முன்பாக நேற்று நடைபெற்ற சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தான் புதிதாக தொடங்கவிருந்த தொழில் ☞2

## யானை தாக்கி 3 விவசாயிகள் பரிதாபச் சாவு

வெவ்வேறு இடங்களில் காட்டு யானை தாக்கி மூன்று விவசாயிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

பொலன்னறுவை - திம்புலாகல, மெதிரிகிரிய - நவநகர மற்றும் சாலியவெவ - நிலபம்மா ஆகிய பிரதேசங்களில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## வெற்றிவாகை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் என்ற ரீதியில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றேன்.

எனவே, தற்போதைய பதில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்குகளைப் பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதுடன், அனைவரினதும் ஆசீர்வாதத்துடன் பதவியேற்பார்.

அவர் இறுதித் தருணத்தில் எவ்வித வாத விவாதங்களும் இல்லாமல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம்.

ரணில்விக்கிரமசிங்க இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கையை ஆசியாவின் அதிசிறந்த நாடாக மாற்றுவார். உலக நாடுகளில் இலங்கையைச் சிறந்த நாடாகவும் மாற்றுவார்.

ஏனெனில் அரசியலில் 50 வருட அனுபவம் உள்ள தலைவரே ரணில். அவர் மீது எவ்வித அவநம்பிக்கையும் பீதியும் கொள்ளக்கூடாது - என்றார்.

## ருவானுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் பதவிக்கு ருவான் விஜேவர்தனவை நியமிப்பது தொடர்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் அனுமதியுடன் அவர் நியமிக்கப்படவுள்ளார். ஐ.தே.கவின் பிரதித் தலைவராக ருவான் விஜேவர்தன தற்போது செயற்பட்டு வருகின்றார்.

அவ்வாறு ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால், சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அவருக்குச் சட்டம் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசின்போது ருவான் விஜேவர்தன சட்டம் மற்றும் ஒழுங்கு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோய் விசேட வைத்தியர் தீபால் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா பரவலானது தற்போதும் சமூகத்தில் உள்ளது. பரிசோதித்துப் பார்த்தால், அதனை அறிந்துகொள்ளலாம்.

காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் தென்பட்டால், சில நேரம் இன்புளுவென்சா அல்லது கொரோனாத் தொற்றாக இருக்கலாம் - என்றார்.

## பூஜையில் வைத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிக்கு முதலீடு செய்வதற்கான 10 இலட்சம் ரூபாய் பணத்தை முனியப்பர் ஆலயத்தில் பூஜையில் வைத்து எடுத்துத் தருமாறு பூசகரிடம் கொடுத்துள்ளார்.

பூசகரும் அவரின் வேண்டுதலின் பிரகாரம் அந்தப் பணத்தைப் பூஜையில் வைத்து எடுத்துக்கொடுத்துள்ளார்.

குறித்த நபர் பணத்தைப் பூசகரிடம் வாங்கிக்கொண்டு ஆலயத்துக்கு வெளியில் வருவதற்கிடையில் அங்கு நின்றிருந்த இருவர் அப்பணத்தைப் பறித்துக் கொண்டு அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யானை தாக்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலன்னறுவை - திம்புலாகல பிரதேசத்தில் 47 வயதான டி.எம்.சென விரத்ன என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

மெதிரிகிரிய - நவநகர பிரதேசத்தில் டி.பி.டி.ஜி. சரத்சந்ர என்ற 65 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மரணித்துள்ளார்.

சாலியவெவ - நிலபம்மா பிரதேசத்தில் ஆர்.பீ.டீ.பிரேமதாச என்ற 76 வயதான வயோதிபர் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பலியாகியுள்ளார்.

## தப்பியோடிய கோட்டா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷ ஓய்வுபெற்ற ஜனாதிபதியின் சிறப்புரிமைகளைப் பெறவுள்ளார். அதன்படி, கொழும்பில் உத்தியோகபூர்வ இல்லம், பாதுகாப்புப் படை, வாகனங்கள் உள்ளிட்ட பல சலுகைகள் அவர் மற்றும் அவரது மனைவிக்குக் கிடைக்கும்.

தற்போது வெளிநாட்டில் உள்ள கோட்டாபாய ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரில் இந்த வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

## 'கோல்பேஸ்' ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அர்ப்பணித்தவர்களை நினைவுகூரும் வகையில்விசேடநிகழ்வுகாலிமுகத்திடல் போரட்டக்களத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இதன்போது பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன், போராட்டத்தின் 100ஆவது ஆண்டுவிழாவை கொண்டாடும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## மு. கா. யாருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு நடைபெறவுள்ள நிலையில், வேட்பு மனுத் தாக்கல் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனினும், கட்சிக்குள் சில பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறும், பிறிதொரு தரப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறும் கூறி வருகின்ற நிலையில் கட்சியினர் இன்று கூடி முடிவெடுக்கவுள்ளனர்.

## மன்னார் மீனவர்களில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் அலை இழுத்துச் செல்லாத வகையிலும் தாமே படகுடன் தம்மை இணைத்துக் கட்டினர்.

கடலில் மூவரும் தத்தளித்துக் கொண்டிருந்ததை தமிழக மீனவர்களின் ரோலர் படகு ஒன்று அவதானித்து கிட்ட நெருங்கி வந்தது. இதன்போது தத்தளித்துக் கொண்டிருந்த மூன்று மீனவர்களில் ஒருவர் உயிரிழந்ததையடுத்து உயிருடன் இருந்த இருவரையும் மீட்டனர்.

அவர்களைத் தமிழக மீனவர்கள் கச்சதீவை அண்மித்த பகுதியில் கொண்டு வந்து இறக்கினர்.

கச்சதீவுக்கு அருகில் கடலில் குதித்துக் கரையேறிய மோகன்ராஜ், ஜெனார்த்தனன் ஆகிய இரு மீனவர்களையும் கடற்படையினர் மீட்டு மன்னாருக்கு அழைத்து வந்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

இதேநேரம் படகில் உயிரிழந்த இராஜமூர்த்தி என்னும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 52 வயது மீனவரின் சடலத்தைத் மன்னாரில் இருந்து சென்ற படகு ஒன்று மீட்டு வந்தது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பௌத்த, சிங்கள கோட்டாபய

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மக்கள் எழுச்சியால் – கிளர்ச்சியால் – இடை நடுவில் நாட்டின் தலைமைத்துவப் பதவியையும் நாட்டையும் விட்டுத் தப்பி ஓடிய ஜனாதிபதி என்ற பெயரை பெற்றிருக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

நாட்டையே மீட்ட வீர புருர் என்று நாட்டு மக்களால் – குறிப்பாக தென்னிலங்கை மக்களால் – புகழப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அதற்காக ஜனாதிபதி தேர்தலில் அமோக ஆதரவுடன் வெற்றி பெற வைக்கப்பட்டார்.

ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குள் நாட்டை மோசமாக சீரழித்த ஒரு தலைவர் என்ற அவப்பெயரோடு நாட்டிலிருந்து அவர் வல்வந்தமாகத் துரத்தி அடிக்க பட்டார்.

இராணுவக் கெடுபிடி போக்காளர் என்று விமர்சிக்கப்பட்ட கோட்டாபய தான் பதவியேற்ற கையோடு, தனக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவர், போராட்டம் நடத்துவர் என்று எதிர்பார்த்தோ என்னவோ தெரியவில்லை, தனது ஜனாதிபதி செயலகத்துக்கும், பாதுகாப்புஅமைச்சுக்கும்பக்கத்தில் – காலிமுகத்திடலை ஒட்டி – மக்கள் போராட்டம் நடத்துவதற்கென்றே ஓரிடத்தை – மைதானத்தை – ஒதுக்கி அதற்கான பெயர் பலகையையும் மாட்டி ஏற்பாடு செய்திருந்தார்.

ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்களின் உணர்வெழுச்சிக்குஇடமளிக்கவேண்டும்என்றஎண்ணப்பாங்கு அவருக்கு அரசியல் அதிகாரத்துக்கு வந்த சமயத்திலேயே இருந்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழர்களின்உரிமைக்கும்இருப்புக்குமானஜனநாயக போராட்டத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கிய கொடூர சர்வாதிகாரி கோட்டாபய என்பது தமிழர்களின் அனுபவப் பாடம். பட்டறிவு.

ஆனால், அந்தக் கொடூர முகத்தைத் தன்னைத் தெரிவு செய்த தனது மக்கள் என்று அவர் கூறிக் கொண்ட பௌத்த, சிங்கள மக்களிடம் அவர் காட்டவே இல்லை என்பதை காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் விடயத்தில் அவர் வெளிப்படுத்திய பாங்கு உறுதிப்படுத்தி நிற்கின்றது

பதிய ஜனாதிபதி பதவியை ஏற்றதும் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த கெடுபிடி நடவடிக்கைகளை கோட்டாபய ராஜபக்ஷ தாம் பதவியில் இருந்த போது எடுக்கவில்லை.

தமக்கு எதிரான மக்கள எழுச்சிப் போராட்டம் சட்டத்தை மீறி, அத்துமீறலில் ஈடுபடாமல் தடுக்கப்பட வேண்டும் என்ற தலைமைத்துவப் பொறுப்பை அவர் பிரதிபலித்தாரே தவிர, தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை இரும்புக்கர அடக்குமுறை கொண்டு நிர்மூலமாக்கியவை போல, தமக்கு எதிரான மக்கள் எழுச்சியை அதே போன்ற இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று அவர் இலக்கு வைத்துக் காய் நகர்த்தவில்லை

அவர் ஓடி ஒளிந்தமையும் முரண்படாமல் விலகிக் கொண்டமையும் கூட, ஒரு வகையில் சிங்கள, பௌத்த மக்களின் அழிவுக்கும் பாதிப்புக்கும் தாம் காரணமாகி விடக்கூடாது என்ற பேரினச் சிந்தனையின் வெளிப்பாடுதான்.

எது, எப்படி என்றாலும் நாட்டைத் தாக்கிய கொரோனாப் பேரிடர் என்ற நெருக்கடியில் இருந்து நாடு மீளுவதற்கு ஆரம்பத்தில் சில பின்னடைவுகள் தென்பட்டாலும், விரைவில் சுதாகரித்துக் கொண்டு, நாட்டை அந்தப் பிடியிலிருந்து வெற்றிகரமாக மீட்டெடுப்பதற்கு அவர் வழங்கிய தலைமைத்துவம் ஏனைய தரப்புகளால் மெச்சப்படுகின்றது.

நேரடி அரசியலுக்கு வர முன்னர் அவர் புரிந்த கொடூரங்கள், பாவாத்மாவாக அவரைத் துரத்துகின்றன. அதை இப்போது அவர் அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறார் என்பதுதான் நிஜம்.

# அமெரிக்கா இலங்கைக்கு வருகை தந்து சகல பிரச்சினைகளையும் தீர்க்கவேண்டும்

## காணாமற்போனோர் உறவுகள் வலியுறுத்து



அமெரிக்கா, இலங்கை வந்து இங்குள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் சரி செய்ய வேண்டும் என வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழர்களின் அரசியல் விருப்பத்துக்கு அமெரிக்கா வந்து தீர்வு காண வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் மற்றும் சிவில் சமூகங்கள் உட்பட போரில் பாதிக்கப்பட்டவர்களை அமெரிக்கா அழைத்து, இந்தக் மக்களுடன் கலந்தாலோசித்து வாக்கெடுப்பு நடத்துமாறும் அல்லது சிங்களவர்களுடன் பேசித் தமிழர்களுக்கு இறையாண்மையை பெற்றுத்தருமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

போஸ்னியா, கொசோவோ, கிழக்கு திமோர், தெற்கு சூடான் மற்றும் பல நாடுகளுக்கு இறையாண்மையை உருவாக்க அமெரிக்கா மட்டுமே உதவியது. சீனா, ரஷ்யா, இந்தியா தமிழர்களுக்கு உதவாது. அவர்கள் எப்பொழு தும் இலங்கையின் பக்கம்தான் இருக்கி றார்கள் எனவும் கூறினர்.

# நீர்த் தேக்கத்தில் தத்தளித்த நபர் தலவாக்கலையில் சடலமாக மீட்பு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்தேக்கத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவத்தனர்.

மேற்படி நபர் நீர்தேக்கத்தில் தத்தளித்தபடி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வேளையில் காப்பாற்றுவதற்காக பிரதேச மக்கள், பொலிஸார், விசேட அதிரடி படையினர், இளைஞர்கள் எனப் பலரும் முயற்சித்த போதிலும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவர்நீருக்குள்மூழ்கிஉயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நிலையிலேயே அவரின் சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வட்டகொடை மடக்கும்புர தெற்கு பகுதியை சேர்ந்த சுப்பையா சுப்பிரமணியம் வயது 61 இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்தாரா அல்லது நீர் தேக்கத்தில் பாய்ந்துள்ளாரா என்பது தொடர்பாகப் பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஞ்சனின் விடுதலையைத் துரிதப்படுத்துமாறு பதில் ஜனாதிபதி நீதியமைச்சருக்கு அறிவுறுத்து

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலையைத் துரிதப்படுத்துமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவிடம் அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனு நாணயக்கார ஆகியோரின் கோரிக்கைகளுக்கு அமைய பதில் ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த செயன்முறை அவசரமாக எடுக்கப்படவுள்ளதால், ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை தொடர்பான ஆவணங்கள் இரு வாரங்களுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெற்றிக் கொண்டாட்டத்தில் கபுடா கேக் வெட்டி வழங்க



மட்டக்களப்பு – செங்கலடி 'கோட்டா கோ கம' போராட்டக் களத்தில் கேக் வெட்டி, வெடிக் கொள்ளுத்தி, கோட்டாபய ராஜபக்ஷவின் உருவப் பொம்மையைத் தீயிட்டுக் கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம போராட்டக்காரர்கள், போராட்ட இடத்தில் கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியமையை அடுத்து செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்திரன் தலைமையில் தமது வெற்றிக் கொண்டாட்டத்தை கொண்டாடினர். இதேவேளை தமது போராட்டத்திற்கு வெற்றி கிடைத்தமையை ஒட்டி கபுடா என வாசகம் பொறிக்கப்பட்ட கேக் ஒன்றையும் வெட்டிபோராட்ட இடத்தில்பரிமாறிக்கொண்டமையுடன் பொது மக்களுக்கு குளிர்பானமும் வழங்கினர்.

# பிரான்ஸ், ஸ்பெயினில் வேகமாக பரவி வரும் காட்டுத்தீ; விண்ணை முட்டும் அளவிற்கு எழுந்தது புகை



ஸ்பெயினின் மலாகா பிராந்தியம் மற்றும் தென்மேற்கு பிரான்ஸில் கோடை வெப்பம் வாட்டி வதைத்து வந்தநிலையில், தற்போது காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது. மரங்கள் பற்றி எரிவதால் விண்ணை முட்டும் அளவிற்கு புகை எழுந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் அச்சத்தில் உறைந்துள்ளனர். கோடை வெப்பம் தொடர்பாக ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், தீ பரவி வரும் பகுதிகளில் வசித்த மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இதனால் பெருமளவில் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. பிரான்ஸின் ஜிரோண்டே பகுதியில் இருந்து சுமார் 14,000 பேர் நேற்று வெளியேற்றப்பட்டனர். அங்கு 1,200 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வர போராடிவருகின்றனர். 10000 ஹெக்டேர் பரப்பளவில் பரவியிருக்கும் காட்டுத்தீயில், மரங்கள் முற்றிலும் அழிந்துள்ளன. ஹெலிக்கொப்டர்கள் மூலம் தண்ணீர் ஊற்றப்பட்டு காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

## தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சார்ஜா - ஐதராபாத் விமானம் தரையிறக்கம்



தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சார்ஜா - ஐதராபாத் விமானம் கராச்சி விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக் கப்பட்டது. பயணிகளை அழைத்து செல்ல மாற்று விமானத்தை கராச்சி விமான நிலையத்துக்கு இண்டிகோ நிறுவனம் அனுப்பி யுள்ளது.

## உக்ரைன் போரில் பயன்படுத்த ஈரானிடம் ட்ரோன்களை வாங்கும் ரஷ்ய ராணுவம்



உக்ரைனில் தாக்குதல் நடத்துவதற்காக ஈரானிடம் இருந்து ட்ரோன்களை வாங்கும் நடவடிக்கையில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட் டுள்ளது. அமெரிக்க அதிபர் பைடன் 6 அரபு வளைகுடா நாடுகளின் தலைவர் களையும், எகிப்து, ஜோர்டான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் தலைவர்க ளை யும் பிராந்திய உச்சி மாநாட் டில் சந்திக்க உள்ளார். இதற்காக 4 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், தனக்கு எதிராக செயல்பட்டு வரும் ஈரான் மீது கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு, அரபு நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உக்ரைனில் நடந்து வரும் போரில் தாக்குதல் நடத்துவதற்காக, ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானங்களை (டிரோன்) ஈரானிடம் இருந்து வாங்க ரஷ்யா முயன்ற வருகிறது. இதற்காக ரஷ்ய அதிகாரிகள் கடந்த மாதம் 8ம் திகதியும், ஜுலை 15ம் திகதியும் ஈரானின் கான் விமானப்படை தளத்துக்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு ஈரானின் ஷாஹெத்-191, ஷாஹெத்-129 டிரோன்களின் செயல்பாடுகள் விளக்கப்பட்டு உள்ளன. ரஷ்யாவுக்கு பல நூறு டிரோன்களை விற்க, ஈரான் அரசு தயாராகி வருகிறது,' என்று தெரிவித்துள்ளார்.

### அடி தாங்கலை...

ரஷ்யாவை எதிர்த்து போரிடுவதற்காக உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத் திய நாடுகள் நவீன ஆயுதங்களை வாரி வழங்கி வருகின்றன.

இதனால், ரஷ்ய படைக்கு பலத்த சேதமும், பின்னடைவும் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, டிரோன் தாக்குதலில் ரஷ்ய படைகள் சிதறடிக் கப்படுகின்றன.

இதன் காரணமாகவே, ரஷ்யாவும் டிரோன் தாக்குதலில் ஈடுபடுவதற்காக ஈரானிடம் இருந்து அதை வாங்குகிறது.



## உக்ரைனின் வின்னிட்சியா பகுதியில் தாக்குதல் மூன்று குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழப்பு

உக்ரைனின் வின்னிட்சியா பகுதியில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்த நிலையில், இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பெப்ரவரி மாதம் முதல் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக கீவ், கார்க்கீவ் போன்ற முக்கிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் பெரும்பாலான மக்கள் வின்னிட்சியா போன்ற நகரங்களில் தஞ்சம் அடைந்தனர். ஆனால், 3லட்சத்து 70 ஆயிரம் பேர் வசித்து வந்த வின்னிட்சியா பகுதியில் ரஷ்யா நேற்று முன் தினம் இரவு திடீரென வான்வெளி தாக்குதல் நடத்தியது. அப்போது பதிவான சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலில் அங்குள்ள குடியிருப்புகள், மருத்துவமனை, கலாச்சார மையம் தரைமட்டமானதாக உக்ரைன் தொவித்துள்ளது. இதில் 3 குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 4 வயதான சிறப்பு குழந்தை ஒன்று உயிரிழந்த தகவல் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. லிஷா என்ற அந்த குழந்தையை அவரது தாய் போர் தொடங்கிய பிறகு வின்னிட்சியாவுக்கு அழைத்து வந்துள்ளார். பாதுகாப்பாக இருப்பதற்காக அவர்கள் அங்கு வந்துள்ள நிலையில் லிஷா தற்போது ரஷ்ய தாக்குதலில் உயிரிழந்துள்ளார். அவரது தாய் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். குழந்தை லிஷாவின் ரத்தம் படிந்த பேபி ஸ்டோலரின் படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம், அமொக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தொவித்துள்ளன. இதனை போர் குற்றம் என அந்த நாடுகள் கண்டித்துள்ளன. இதற்கு விளக்கம் அளித்துள்ள ரஷ்யா மக்கள் வசிக்கும் இடத்தில் தாக்குதல் நடத்தவில்லை என தொவித்துள்ளது.

உக்ரைன் படைகள், ஆயுதங்கள் வாங்குவதற்கு வெளிநாடுகளுடன் கூட்டம் நடத்தி வந்த கட்டத்தின் மீதுதான் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா தொவித்துள்ளது. எனினும், அதை ஏற்க மறுத்த உக்ரைன், திட்டமிட்டு பொதுமக்களை கொல்லும் நோக்குடன் இந்த தாக்குதல் நடந்துள்ளதாக தெரிவித்துள்ளன.

## சூடானில் இரு தரப்பினர் இடையே மோதல்; 33 பேர் உயிரிழப்பு

சூடானின் புளூ நைல் மாநிலம், அல் ரோசரீஸ் நகரில் இரண்டு பழங் குடியின குழுக்களிடையே கடுமை யான மோதல் ஏற்பட்டது. நிலத்த கராறில் ஆரம்பித்த பிரச்சிசனை கடுமையான மோதலாக மாறி, ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக்கொண்டனர். துப்பாக்கி சூடு நடத்தியதுடன், வீடுகள் மற்றும் கடைகளுக்கு தீ வைக்கப்பட்டன. இதை யடுத்து அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படை யினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொது இடங் களில் கூட்டமாக கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் சற்று அமைதி திரும்பியது. எனினும், நேற்று மீண்டும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல்களில் 33 பேர் கொல் லப்பட்டுள்ளனர். 108 பேர் காயம டைந்துள்ளனர். காயமடைந்தவர் களுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. மோதல் காரணமாக ஏராளமா னோர் உயிருக்குப் பயந்து காவல் நிலையங்களில் தஞ்சம் அடைந் தனர். அல்-ரோசரீஸ் நகரில் தொடர்ந்து மோதல் நீடிப்பதால் கூடுதல் படைகள் வரவழைக்கப் படுகின்றன. கிசான் பிராந்தியம் மற் றும் புளூ நைல் மாநிலத்தில் நீண்ட காலமாக பதற்றம் நிலவுகிறது. 2019ல் ராணுவத்தால் வெளி யேற்றப்பட்ட முன்னாள் அதிபர் உமர் அல் பஷீருக்கு ஆதரவாக தெற்கு கொரில்லா போராளிகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்ற னர். ராணுவ தளபதி அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் தலைமை யிலான ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கை யானது, பாதுகாப்பு வெற்றிடத்தை உருவாக்கிவிட்டதாக அரசியல் வல்லுநர்கள் தெரி விக்கின்றனர்.

நிலம், கால்நடைகள், தண்ணீர் மற்றும் மேய்ச்சல் தொடர்பான கொடூரமான மோதல்கள் வெடித் துள்ளதாகவும், பழங்குடி யினரி டையே வன்முறை தீவிரமடைந்தி ருப்பதாகவும் கூறு கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கேரளாவில் யானைகளுக்கான புத்துணர்வு சிகிச்சை முகாம் பூஜையுடன் தொடக்கம்

## பல்வேறு கோவில்களில் இருந்து யானைகள் வருகை



கேரளாவில் கோவில் மற்றும் வளர்ப்பு யானைகளுக்கான புத்துணர்வு சிகிச்சைமுகாம்பூஜையுடன்துவங்கியுள் ளது. திருச்சூர் மாவட்டத்தில் உள்ள வடக்கு நாதன் சிவன் கோவிலில் 40 வது ஆண்டாக கோவில் மற்றும் வளர்ப்புயானைகளுக்கானபுத்துணர்வு நிகழ்ச்சி தொடங்கியுள்ளது. இங்கு வரும் யானைகள் அனைத்தும் பல்வேறு கோவில்களில் உள்ள வளர்ப்பு யானைகள் மற்றும் தனியாருக்கு சொந்தமான யானைகளும் இங்கு வரு கின்றன.

இந்த ஆண்டின் சிறப் பானது ஆசியாவிலேயே மிக பெரிய யானையான செத்திக் கோட்டுராமச்சந்திரன் கலந்து கொண்டுள்ளது. தற்போது வடக்கு நாதன் சிவன் கோவி லில் தெற்கு நடை இருக்கக் கூடிய பகுதிகளில் யானைகள் வரிசையாக நிறுத்தப்பட்டுள் ளது.

யானைகள் அனைத் துக்கும் சற்று நேரத்தில் சாமி தரிசனம் செய்யும் பக்தர்கள் மற்றும் யானைகளை பார்த்து ரசிக்க கூடிய ரசிகர்களும் தங்களுக்கு பிடித்தமான யானைகளுக்கு உணவுகளை அளித்து புத்துணர்வு முகாம் நிகழ்ச்சியை தொடங்க இருக்கிறார்கள்.

இந்த யானைகள் அனைத்துக்கும் எதிர்வரும் ஒரு மாதத்திற்கு ஓய்வு அளிக்கப்படும். அதைப்போல் யானை களுக்கு சிகிச்சைகளும் அளிக்கப்படும். மழைக்காலம் மற்றும் குளிர்காலங் களில் கோவிலில் வளர்க்கப்படும் யானைகள் மற்றும் தனியார் சொந்த மான யானைகளுக்கும் பெரும்பாலும் கேரளாவில் இருக்கக்கூடிய யானைகள் அனைத்தும் ஆண் யானைகளாக இருப்பதால் மழை மற்றும் குளிர் காலங் களில் மஸ்த் எனும் நீர் வழியக்கூடிய காலமாகவும், யானைகள் இந்த மாதங் களில் பாகன்களுக்கு கட்டுபடாத காலக்கட்டம் என்பதால் முழுமையான ஓய்வும்,யானைகளுக்கு தேவையான சிகிச்சைகளும் தொடர்ந்து அளிக்க பட உள்ளது.



## மசூதிகளுக்கு சொந்தமான ரூ.750 கோடி சொத்துக்கள் மீட்பு; அமைச்சர் தகவல்

தமிழகம் முழுவதும் மசூதிகளுக்கு சொந்தமான ரூ.750 கோடி சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதாக சிறுபான்மை துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கத்தில் சிறுபான்மை துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேற்று அளித்த பேட்டி: ரூ.6 கோடி மதிப்பீட்டில் மசூதிகள் சீர மைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் ரூ.6 கோடி மதிப்பீட்டில் தேவாலயங்கள் சீரமைக்கும் பணிகள் நடைபெற உள்ளன. மேலும் தற்போது பெறப்பட்ட மனுக்கள் மீது 10 நாட்களுக்குள் மீண்டும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு பணிகள் தொடங்கப்படும். தமிழகம் முழுவதும் மசூதிகளுக்கு சொந்தமான ரூ.750 கோடி சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளது' என்றார்.



## பா.ஜ.க. சார்பில் மத்திய அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்– அண்ணாமலை பங்கேற்று பேசுகிறார்

கரையான்புதூரில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மத்திய அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் தாமரை மாநாடு என்ற பெயரில் இன்று (ஞாயிற் றுக்கிழமை) மாலை 4 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் பா.ஜ.க. மாநிலதலைவர் அண்ணாமலை கலந்துகொண்டு பேசுகிறார். இதையொட்டி அங்கு பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்லடம் திருச்சி மெயின் ரோடு, பல்லடம் திருப்பூர் மெயின் ரோட்டில் சாலையின் இருபுறமும் பா.ஜ.க.கொடி கட்டப் பட்டுள்ளது. முக்கிய சந்திப் புகளில் பிரதமர் மோடி, மாநில தலைவர் அண்ணா மலை உள்ளிட்டோரின் அலங்கார பதாகைகள் வைக் கப்பட்டுள்ளன. பொதுக்கூட்ட ஏற்பாடுகளை மாநில பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம், திருப்பூர் வடக்கு மாவட்டத் தலைவர் செந்தில்வேல், மாவட்ட பொதுச் செயலாளர் கே.சி.எம்.சீனிவாசன், உள்ளிட்ட பா.ஜ.க. நிர்வாகிகள் செய்துள்ளனர்.

# வெள்ளத்தில் மூழ்கும் புதுச்சேரி மாநிலம்



புதுச்சேரி மாநிலம் ஏனாம் பகுதியில் ஏற்பட்டிருக்கும் கடும் வெள்ள பெருக்கால் குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளம் நீரில்புகுந் துள்ளது. தற்பொழுது ஆந்திரா, தெலுங்கானாவில் தொடர்ந்து மலை பெய்து வருவதால் கோதாவரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஏனாம் பகுதி யில் உள்ள பல்வேறு இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. குறிப்பாக ஏனாம் பகுதியில் தோலேஸ்வரம், பால யோகி நகர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட பகுதியில் 3000 இற்குமேற்பட்ட வீடுகளில் வெள்ளம் நீர் சூழ்ந்துள்ளது. இந்நிலையில் கோதாவரி ஆற்றில் வரலாறு காணாத அளவுக்கு அதிக வெள்ளம் பேருக்கு ஏற்பட்டுருப்பதால் தற்பொழுது வரை 34 லட்சம் கனஆடி தண்ணீர் கோதாவரி ஆற்றில் இருந்து வருவதால், இது மேலும் அதிகரிக்கும் என்று கரையோரம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றார்கள். அரசு சார்பில் மீட்பு பணி நடவடிக்கை நடைபெற்று வருகின்றது. 2000 மேற்பட்ட மக்களை மீட்டு அரசு முகாமில் தங்கப்பட்டு வருகிறார்கள்.

ஆந்திரா மாநிலம் தோளீஸ்வரம் தடுப் பணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றம் 27 லட்சம் கனஅடி தண்டியுள்ளது. 7 நாள்கள் வெள்ளத்தில் மக்கள் தவித்து வருகின்றார்கள். புதுச்சேரி அரசு சார்பில் அமைச்சர்கள், அதி காரிகள் என யாரும் தங்களை கண்டுகொள்ள வில்லை என கடும் குற்றசாட்டு வைத்துள்ளனர்.

வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்ததால் மக் களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்மையான கோரிக்கை வைத்துள்ளார். வெள்ளத்தில் பாம்புகள் அடித்து வருவதால் மக் கள் அச்சத்தில் உள்ளார்.



## தேநீர் விடுதி தீ விபத்தில் தீக்காயம் அடைந்த 8 பேருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் உதவி

லகன்னியாகுமரி மாவட்டம் பார்வதிபுரம் மேம்பாலத்தின் கீழ் அமைந்துள்ள பீக் என்பவரின் தேநீர் விடுதியில் இன்று காலை சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீவிபத்தில் தேநீர்விடுதியில் வேலைபார்த்து வந்த மூசா (வயது 48) பிரவின் (வயது 25) சேகர் (வயது 52) மற்றும் அங்கு தேநீர் அருந்த வந்த சுப்பையன் (வயது 66) சுதா (வயது 43) சந்திரன் (வயது 62) சுசீலா (வயது 50) மற்றும் ஒருவர் உட்பட 8 நபர்கள் தீக்காயம் அடைந்துள்ளனர் என்ற செய்தியினை கேட்டு வருத்தமுற்றேன். தீக்காய மடைந்தவர்களுக்கு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவம னையில் சிறப்பு சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன்.

இத்தீவிபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா ரூபாய் ஐம்பதாயிரம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்..

## படகு கவிழ்ந்து மீனவர்கள் மாயம்



ராமேஸ்வரம் அருகே மண் டபத்தில் இருந்து சென்ற படகு காற்றின் வேகம் காரணமாக கவிந்தத்தில் அதில் கடலுக்கு சென்ற மீனவர்கள் மாயமா கியுள்ளனர். படகில் இருந்த 4 மீனவர்கள் நல்வாய்ப்பாக உயிர் தப்பிய நிலையில் மாய மான மீனவரை மரைன் பொலிஸார் தேடிவருகின்றனர்.

# இ.போ.சபையின் பணியாளர்கள் வாழைச்சேனையில் போராட்டம்







(எச்.எம்.எம்.பர்ஸான்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை வாழைச்சேனை கிளை ஊழியர்கள் நேற்று வாழைச்சேனை இ.போ. சபைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியின் குறுக்கே பஸ்களை நிறுத்திப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடமையை மேற்கொள்ள தூர இடங்களிலிருந்து டிப்போவுக்கு வரும் தமக்கு பெற்றோல் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தே ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸாரும், இராணுவத்தினரும் போராட்டம் நடத்திய ஊழியர்களுடன் பேச்சு மேற்கொண்டனர்.

இன்று ஊழியர்களுக்குப் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தமைக்கமைய ஊழியர்கள் போராட்டத்தை கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

## எரிபொருள் வரிசையில் வைத்தியர் மீது தாக்குதல்

### தெஹியத்தகண்டியவில் சம்பவம்

எரிபொருள் வரிசையில் வைத்தியர் ஒருவர் மீதும் மற்றும் சுகாதார ஊழியர் ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெஹியத்தகண்டிய நவமெதகம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுகாதார ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த குழுவினரால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமக்கு தேவையான எரிபொருள் கிடைக்க வில்லை எனக் குற்றம் சுமத்தி அரச வைத்தியசாலைகள் சிலவற்றின் ஊழியர்கள் நேற்று சேவையில் இருந்து விலகியிருந்தனர். எவ்வாறாயினும், சில பிரதேசங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொடுக்க பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## எதிரிகளுக்கும் அடைக்கலம் வழங்குவது இஸ்லாமின் வழி

### கிண்ணியா நகரசபை உறுப்பினர் விளக்கம்

(ஹஸ்பர்)

எதிரிகளையும் இன்முகத்துடன் வரவேற்பதே இஸ்லாம் காட்டிக் கொடுத்த வழி முறையாகும் என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இன,மத பேதங்களின்றி சகோதரத்துவத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த நாட்டு மக்களிடையே அரசியல் சுய இலாபத்திற்காக இன,மத,குரோதங்களை ஏற்படுத்தி, முஸ்லிம்களை எதிரிகளாகக் காட்டி, அதில் ராஜபக்ஷக்கள் வெற்றியும் கண்டனர்.



முஸ்லிம்களின் பொருளாதாரம், சொத்துக்கள், உயிர்கள் எனப் பல்வேறு அழிவுகளையும் ஏற்படுத்தி இன மத வெறுப்பின் உக்கிரத்தால் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கவும் முனைந்தனர்.

இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட அக்கொடூரங்களின் சூத்திரதாரியான ஜனாதிபதி கோட்டாபய அவர்களுக்கு இன்று அரபு தேசங்களே தஞ்சம் வழங்கி இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. - எனவும் சுட்டிக்காட்டுகின்றேன்.

## பொலிஸாரைத் தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

### சேருநுவரவில் வெள்ளி சம்பவம்

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று பேர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த நேற்று முன்தினம் சேருநுவர பிரதேசத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்த சந்தேகநபர்கள் 24 மற்றும் 25 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## காரைதீவில் கரைவலை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சி

### மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசம் நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேசத்தை சேர்ந்த கரைவலை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலை திட்டங்கள் குறித்து கல்முனை - அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஆராய்ந்து வருகின்றது.



நெதர்லாந்து நாட்டின் மனித நேய கூட்டுறவு சங்கத்தின் நிதி பங்களிப்பிலான ஐந்தாண்டு வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயம், வீட்டு தோட்டம், மீன்பிடி, நெசவு போன்றவை சார்ந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு சமாசம் ஆக்கமும், ஊக்கமும் வழங்குகின்றது.

காரைதீவு, நாவிதன் வெளி, கல்முனை வடக்கு, வீரமுனை, கோரக்கோயில், மல்வத்தை, மல்லிகைத்தீவு, பழைய வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, அட்டப்பள்ளம், மாணிக்கமடு, திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் பொருத்தமான வேலை திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் சமாசத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் இப்பிரதேசங்களுக்கு கள விஜயங்கள் மேற்கொண்ட வேளையில் காரைதீவு பிரதேசத்தில் கரைவலை மீனவ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்னின்று பாடுபடுகின்றார்.

இதற்கு அமைய காரைதீவில் மீனவர் சிக்கன கூட்டுறவு சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பூர்வீக ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர் பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை கூட்டுறவு துறை மூலம் மேம்படுத்த வேண்டும் என்கிற தூர நோக்குடன் மூன்று தசாப்த காலத்துக்கு முன் இச்சமாசம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசமைப்புக்கு முரணாக ரணில் செயற்படமாட்டார்!

## பாலித ரங்கே பண்டார உத்தரவாதம்



அரசமைப்பின் பிரகாரமே ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு யாரும் குழப்பமடைவதில் எந்த பிரச்சினையும் இல்லை. ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புக்கு முரணாக ஒருபோதும் செயற்படமாட்டார் என ஐக்கிய தேசிய கட்சி செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகக் கடமையை ஏற்றுள்ள நிலையில் அதுதொடர்பில் தெரிவிக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்–

அரசமைப்பின் பிரகாரமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும். அதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார்.

நாட்டில் ஜனாதிபதி இல்லாத நிலையில் பிரதமர் ரணில்விக்ரமசிங்கபதில்ஜனாதிபதியாகச்செயற்படுவது அரசமைப்பின் பிரகாரமாகும்.

அதனால் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதற்கு மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி அல்லது வேறு எந்த தரப்பினரும் குழப்பமடைவதில் எந்த பிரச்சினையும் இல்லை.

அத்துடன் பிரதமர் பதிவியை ஏற்றுக்கொள்வதற்கு யாரும் இல்லாத நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரி இருந்தார். அதன் பிரகாரமே அவர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார். ஏனெனில் அரசியல் அனுபவம், வெளி நாடுகளுடனான தொடர்பு என அனைத்து தகுதிகளும் அவருக்கு இருக்கின்றன. அத்துடன் தற்போது நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இல்லை. இந்நிலையில் நாடாளுமன் றம் ஊடாக ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய் யப்படும்வரை பிரதமர் பதில் ஜனாதிபதியாகச் செயற் படுவார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட யாரும் முன்வராவிட்டால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகச் செயற்படுவார். அடுத்த படியாக பிரதமர் ஒருவரை நாடாளுமன்றம் தெரிவுசெய்ய வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி பதிவியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் சபாநாயகர் ஜனாதிபதியாகச் செயற்படுவார்.

மேலும் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்படவேண்டும் என்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகின்றது. அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எனவே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கே முன்னுரிமை வழங்கி செயற்படுவதற்கே ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார். குறிப்பாக எரிபொருள் பிரச்சினை தீர்க்கப்படவேண்டி இருக்கின்றது. சமையல் எரிவாயு பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றது. – என்றார்.

# எனது தாய் நாட்டுக்காக நான் தொடர்ந்தும் சேவையாற்றுவேன்

## முன்னாள் ஜனாதிபதி கோட்டா உறுதி

ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் தொடர்ந்தும் தாய் நாட்டுக்காக சேவையாற்றுவேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாசிக்கப்பட்ட அவரது இராஜினாமா கடிதத்திலேயே இதனை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க வாசித்தார்.

அந்தக் கடிதத்தில், நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கொவிட் தொற்று உலகம் முழுவதையும் பாதித்தது.

அந்த நேரத்தில் இலங்கையைத் தொற்றுநோயிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாகத் திருப்தியடைவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொது முடக்கங்களை அமுல்படுத்தியதன் மூலம், நாடு அந்நியச் செலாவணியை இழந்ததாகவும், ஏற்கனவே பாதிக்கப்பட்ட பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்பட்டதாகவும் தனது இராஜிநாமாக் கடிதத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையற்ற பொருளாதார தன்மைக்குத் தீர்வுகாணும் நோக் கில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க அனைத்துக் கட்சிக ளுக்கும் நாடாளுமன்றில் நான் அழைப்பு விடுத்தேன்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முழுமையாக நான் முயற்சி எடுத்தேன் என்பதை நம்புகின்றேன். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# படையினருக்கு முழுமையான அதிகாரங்கள் சர்வதேச மன்னிப்புச்சபை கவலை தெரிவிப்பு

அறிவிக்கப்பட்டுள்ள அவசர கால–நிலையில் படையினர் பலப்பிரயோகத்தில் ஈடுபடுவதற்கான முழுமையான அதிகாரத்தை இலங்கை அரசாங்கம் வழங்கக்கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புசபை மக்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு படையினரைப் பயன்படுத்தவேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.


ஆயுதப்படையினரைப் பயன்படுத்துவது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வது ஒருவரின் உயிரிழப்பிற்குக் காரணமான அளவுக்கதிகமான கண்ணீர்புகை பிரயோகம் போன்றவற்றின் மூலம் அதிகாரிகள் தங்கள் பதில் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளமை கவலையளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

அவசரகாலநிலையின் போதுகூட பலத்தைப் பயன்படுத்துவதற்கான முழுமையான அதிகாரத்தைவழங்குவது ஆபத்தானது. இராணுவத்தினர் எதிரிகளுடன் போரிடுவதற்கே பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் பொதுமக்களைக் கட்டுப்படுத்துவதற்கு இல்லை என்பதால் பொதுமக்கள் அணிதிரளும் பகுதிகளில் ஒழுங்கை நிலைநாட்ட இராணுவத்தை பயன்படுத்தக்கூடாது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

மேலும் காயங்கள், உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அதிகாரிகள் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்படவேண்டும், மிகவும் அவசியமாக பலத்தைப் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலைகளில் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக ஆகக்குறைந்தளவு பலத்தை அளவுக்கதிகமாகாமல் பயன்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக மாறினால் சட்டம் ஒழுங்கு அதிகாரிகள் தனித்தனி சம்பவங்களாக ஆராய்ந்து மிகவும் அவசியமான சூழ்நிலைகளுக்கும் வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கும் பலத்தை பயன்படுத்தவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பலத்தை பயன்படுத்துவது சட்டஅமுலாக்க பிரிவினர் எதிர்கொள்ளும் சூழ்நிலைக்கு சமமானதாகயிருக்கவேண்டும், அதிகாரிகள் வன்முறைகளை தடுக்க முயலவேண்டும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடாது எனவும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நாடு மிக மோசமான பொருளாதார நிலையை எதிர்கொண்டுள்ள ஆர்ப்பாட்டங்கள் மேலும் தீவிரமடையும் நிலையி;ல் அதிகாரிகள் நிலைமையைக் கட்டு;ப்படுத்த தணிப்பதற்கு தீவிரநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,பொதுமக்கள் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் தராதரங்களின் அடிப்படையில் பொருள்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்யவேண்டும் என யாமினி மிஸ்ரா தெரிவித்துள்ளார்.



# சிறந்த நாட்டை கட்டியெழுப்பும் மக்களின் பேராவலை ஜூலை 9 போராட்டங்கள் நன்கு புலப்படுத்துகின்றன!

## கனேடிய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு

இலங்கையில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற போராட்டங்கள் ஒரு சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பெருவிருப்பத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை உடனடியாக மேற்கொள்வதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படக் கூடிய அரசமைப்பிற்கு அமைவானதுமான நடவடிக்கைகளுக்கு கனடா ஆதரவு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாடளாவிய ரீதியில் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டங்கள் படிப்படியாகத் தீவிரமடைந்துவந்த நிலையில், கடந்த வாரம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து 13 ஆம் திகதியன்று தான் பதவி விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்த நிலையில், அவர் நாட்டைவிட்டு வெளியேறினார். பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலகவேண்டுமென வலியுறுத்தி ஏற்கனவே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்ததுடன் சில தினங்களுக்கு முன்னர் அவரது இல்லம் தீக்கிரையாக்கப்பட்ட பின்னணியில், பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அவருக்கு எதிரான போராட்டங்கள் மேலும் வலுப்பெற்றன. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் செய்திருக்கும் பதிவிலேயே கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு – இலங்கையில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற போராட் டங்கள் ஒரு சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பெருவிருப்பத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. அதன்படி பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை உடனடியாக மேற்கொள்வதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படக்கூடிய அமைதியானதும் அரசமைப்பிற்கு அமைவானதுமான நடவடிக்கைகளுக்கு கனடா ஆதரவு வழங்கும். அதேவேளை அமைதியான முறையில் போராட்டங் களில் ஈடுபட்டவர்களின்மீதும், ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் எவ்வகை யிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும். அதுமாத்தி ரமன்றி அத்தகைய வன்முறைத்தாக்குதல்களுடன் தொடர்பு பட்டவர்கள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டியது அவசி யமாகும். மேலும் அமைதியான முறையில் போராட்டங் களை முன்னெடுப்பதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும்என்று அவர்வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2022இல் வெளியிடப்பெற்றது.